# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 131 • சனிக்கிழமை Saturday • 08.08.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode


# காவிரி விவகாரத்தில் அரசியல் செய்யும் எண்ணம் இல்லை

## சட்டபேரவையில் முதலமைச்சர் விஜய் பேச்சு



தவெக அரசின் முதல் பட்ஜெட்டை நிதியமைச்சர் மரிய வில்சன் நேற்று முன் தினம் பட்ஜெட் தாக்கல் செய்த நிலையில் தொடர்ந்து நேற்று வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் வினோத் தாக்கல் செய்தார். அதன் தொடர்ச்சியாக இன்று பட்ஜெட் மீதான விவாதம் நடைபெறுகிறது. இந்தநிலையில், தவெக அரசு அமைந்த பிறகு மேகதாது விவகாரத்தில் கர்நாடக அரசு இதுவரை இல்லாத வேகத்தில் செயல்படுகிறது.

காவிரி விவகாரத்தில் கர்நாடகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து நிற்கின்றன. ஆனால், இங்கேஅனைத்துக்கட்சி கூட்டத்தைக் கூட தமிழ்நாடு அரசு மறுக்கிறது என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளிக்கும் வகையில், சட்டமன்றத்தில் முதல்-அமைச்சர் விஜய் உரையாற்றியதாவது:-

காவிரி நமக்கு உயிர் ஆதாரம்; அதனை வைத்து அரசியல் செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லை. மேகதாது அணை கட்டும் விஷயத்தில் தமிழ்நாட்டின் உரிமையை ஒருபோதும் விட்டுத்தர மாட்டோம். காவிரிப் பிரச்னையில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என கோரிக்கை வைத்தது நான்தான்.

பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்தை பிரதமருக்கும் அனுப்பி வைத்திருக்கிறோம். மேகதாது விவகாரத்தில் நாம்அனைவரும்சேர்ந்ததுதான் தீர்மானம் நிறைவேற்றினோம்.

மத்திய நீர்வளத்துறை அமைச்சர் பதிலுக்குபின் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை சுட்டிக்காட்டி கடிதம் எழுதினேன். கர்நாடகாவில் சில அணைகள் கட்டப்பட்டபோது 1969-ல் இதே பேரவையில் விவாதங்கள் நடந்தன.

காவிரிப் பிரச்னையில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என கோரிக்கை வைத்தது நான்தான். .காவிரி விவகாரத்தை தீர்ப்பதற்கான ஒரே எண்ணத்துக்காகவே பெங்களூருசெல்லமுடிவெடுத்தேன். பெங்களூரு சென்று கர்நாடக முதல்-மந்திரியுடன் பேசி பார்ப்போமே என நினைத்துதான் முடிவெடுத்தேன்.பகை நாடுகளே பேசி தீர்க்கின்றன.

பக்கத்து மாநிலத்துடன் பேசி பார்க்கலாம் என்றுதான் நினைத்தேன். பெங்களூரு சென்று அவமானம் நடந்தால் என்னாகும் என கேட்டார்கள். மக்களுக்காக அதையும் தாங்க தயார் என்றார்.

திமுக மட்டுமல்ல அனைத்துக் கட்சிகளும் மேகதாட்டு விவகாரத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என கோரிக்கை வைக்கின்றன. கர்நாடக முதல்வரும், அந்த அரசும் மிகவும் வேகமாக செயல்பட்டுவருகின்றன.

மத்திய நிதியமைச்சர், ஜல்சக்தி துறை அமைச்சர் உள்ளிட்டோரை கர்நாடக முதல்வர் சந்தித்து கோரிக்கை வைத்துள்ளார். நாடாளுமன்றத்தில் மத்திய ஜல்சக்தி இணையமைச்சர் மேகேதாட்டு அணை கட்ட தமிழக அரசின் அனுமதிதேவையில்லை என சொல்லியுள்ளார். அதன்பின்னர் கர்நாடகாவில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தை முதல்வர் சிவகுமார் கூட்டியுள்ளார். இப்படி கடந்த ஒரு மாதத்தில் படிப்படியாக பல நடவடிக்கைகளை கர்நாடக அரசு எடுத்துள்ளது.

இப்படி மாநில நலன் எனவந்தால்கட்சிவேறுபாடுகளை கடந்து எப்படி கர்நாடகாவில் ஓரணியில் நிற்கிறார்களோ, அதே போல நாமும் நிற்க வேண்டும் என சொல்கிறோம். ஏன் அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்ட மறுக்கிறீர்கள் என்பதுதான் என் கேள்வி. நாங்கள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்த பிறகு ஜூலை 28ல் இரண்டாவது கடிதத்தை பிரதமருக்கு முதல்வர் எழுதியுள்ளார். மு.க.ஸ்டாலின் முதல்வராக இருந்தபோது பிரதமருக்கு கடிதம் எழுதியதை இப்போதைய முதல்வர் விமர்சித்துள்ளார்.

இந்த அரசு ஒரு புது டெக்னிக்கை கடைபிடிக்கிறது. ஏதாவது ஒன்றை செய்வதற்கு முன்பு அதனை கசிய விடுகிறார்கள். முதல்வர் விஜய் கர்நாடகா செல்கிறார் என வேளாண் துறை அமைச்சர் முதலில் தெரிவித்துவிட்டு, பிறகு மறுத்துப் பேசினார். பிறகு 2 அமைச்சர்கள் அதிகாரப்பூர்வமாக எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். பின்னர் 13 பேர் கொண்ட குழு செல்வதாக சொன்னார்கள்.

குறுவை சாகுபடிக்கு நிவாரண தொகுப்பு ஏற்கெனவே கொடுத்துவிட்டோம். அரசியலே நாங்கள் தான் என சொல்லிக்கொள்பவர்களுக்கு இது எப்படி தெரியாமல் போனது எனத் தெரியவில்லை. பேப்பர் படித்திருந்தால் இது தெரிந்திருக்கும்" என்றார். அதன்பின்னர் உரையை தொடர்ந்த உதயநிதி ஸ்டாலின், "குறுவை தொகுப்பு திட்டம் என்பது எல்லா அரசுகளும் கொடுப்பதுதான். இப்போது வறட்சி நிவாரணம் கேட்கிறார்கள். இதற்கான வித்தியாசத்தை தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கு பேப்பர் படித்தால் மட்டும் போதாது. அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி, விவசாயிகளிடம் கலந்து பேசி கோரிக்கைகளைதெரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

# மேகதாது விவகாரத்தில் தவெக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? எதிர்கட்சி தலைவர் உதயநிதி கேள்வி



காவிரி விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது;

மேகதாது விவகாரத்தில் கர்நாடக அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமனை, கர்நாடக முதல் மந்திரி நேரில் சந்தித்து மேகதாவில் அணை கட்ட நிதி உதவி கோரியிருந்தார். மத்திய நீர்வளத்துறை மந்திரியையும் சந்தித்து மேகதாது அணைக்கட்ட ஒப்புதல் வழங்க கோரிக்கை விடுத்தார்.

கடந்த ஒரு மாதத்தில் மேகதாது அணை கட்டுவது தொடர்பாக பல்வேறு பணிகளை கர்நாடகாவில் உள்ள அனைத்து கட்சிகளும் இணைந்து செயல்படுகிறது. இதற்காகத்தான் தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் இணைந்து மேகதாது அணை கட்டுவதை எதிர்க்கும் வகையில் அனைத்து கட்சி கூட்டத்தைக் கூட்ட நாம் கோரிக்கை விடுத்தோம். விவசாயிகளுக்கு முழு பயிர்க்கடன் தள்ளுபடி என்ற வாக்குறுதி கொடுத்துவிட்டு அரைகுறையாக தள்ளுபடி செய்தது ஏன்?

மேகதாது அணை குறித்து விவாதிக்க தவெக அரசு அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும். குறுவை சாகுபடி விவாசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்."

இவ்வாறு அவர் பேசினார்.

# எம்எஸ்எம்இ மேம்பாட்டு திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்றம்



புதுடெல்லி: சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டு திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்ற ப்பட்டது. இந்த மசோதா மாநிலங்களவையில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மக்களவை இன்று காலை 11 மணிக்கு கூடியதும், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் கடந்த ஜூலை 20-ம் தேதி டெல்லியில் நடத்திய பேரணியின்போது காவல்துறையினர் நடத்திய தாக்கதலுக்கு உள்துறை அமைச்சர் அமித் ஷா பதிலளிக்க வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

அவர்களை சமாதானப்படுத்த சபாநாயகர் ஓம் பிர்லா தொடர்ந்து முயன்ற நிலையில், அமளி நீடித்ததால் அவை பகல் 12 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அவை மீண்டும் கூடியதும்,சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சி, சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டு திருத்த மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்தார்.சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவ ங்களிடம் இருந்து பொருட்கள் அல்லது சேவைகளைப் பெறுவோர், அதற்கான பணத்தை செலுத்துவதில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

குறிப்பாக, சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடம் இருந்து பொருட்கள் அல்லது சேவையைப்பெறும் மத்திய பொதுத்துறை நிறுவனங்கள், அதற்கான கட்டணங்களை 'வர்த்தக வரவுத் தொகை தள்ளுபடி அமைப்பு' (Trade Receivables Discounting System - TReDS) மூலமாகவே செலுத்த வேண்டும் என்று இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது.

மேலும், இரு தரப்புக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டால் மேற்கொள்ளப்படும் சமரச முயற்சி தோல்வி அடைந்தால், அந்த முயற்சி முடிவுக்கு வந்த தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் நடுவர் மன்ற தீர்வுக்கான நடவடிக்கையை தொடங்க வேண்டும். மேலும், ாதங்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிப்பு நிறைவடைந்த தேதியில் இருந்து 90 நாட்களுக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். ஒரு வழக்கு ஆறு மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் இருந்தால், தீர்ப்பளிக்கப்பட்ட தொகையில் குறைந்தது 50 சதவீதத்தை விநியோகஸ்தருக்குச் செலுத்த வேண்டும் என இந்த மசோதா வலியுறுத்துகிறது. அவையை நடத்திய திலீப் சைகியா, இந்த மசோதாவை குரல் வாக்கெடுப்புக்கு விட்டார்.பின்னர்,குரல் வாக்கெடுப்பில் மசோதா நிறைவேற்றப்பட்டதாக திலீப் சைகியா தெரிவித்தார்.

தொடர்ந்து அமளி நீடித்ததால் அவையை அவர் நாள் முழுவதும் ஒத்திவைத்தார். இதையடுத்து, மீண்டும் அவை வரும் திங்கள் கிழமை கூடுகிறது. இதேபோல், மாநிலங்களவையும் தொடர் அமளி காரணமாக திங்கள் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# அதிரடியாக உயர்ந்த தங்கம் விலை



தங்கம் விலை நேற்று முன்தினம் சவரனுக்கு ரூ.2,240 அதிகரித்து ஒரு சவரன் ரூ.1,07,840-க்கு விற்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நேற்றும் தங்கம் விலை கிடுகிடுவென உயர்ந்தது. நிலவரப்படி கிராமுக்கு ரூ.270-ம் சவரனுக்கு ரூ.2,160-ம் அதிரடியாக உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,750-க்கும் ஒரு சவரன் ரூ.1,10,000-க்கும் விற்பனையானது.

காலையில் தங்கம் விலையில் மாற்றமின்றி அதே விலையில் விற்பனையானது.

இந்த நிலையில் மாலையில் தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை மாலையில் சவரனுக்கு ரூ.1,200 உயர்ந்து,

ஒரு சவரன் ரூ.1,11,200-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கிராமுக்கு ரூ.150 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.13,900-க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையை பொறுத்தவரையில் மாற்றமின்றி, ஒரு கிராம் ரூ.250-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் விவசாய பயிர் காப்பீடு குறித்த விழிப்புணர்வு வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (7.8.2026) கொடியசைத்து துவக்கி வைத்தார்.




எலும்பு மற்றும் மூட்டு வாரம்–2026 நாளையொட்டி, தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை சார்பில், நெல்லை ஆர்த்தோ கிளப் எலும்பு முறிவு மருத்துவர்கள் சார்பாக, ஆட்டோ மற்றும் பேருந்து ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நீண்ட நேரம் வாகனம் ஓட்டுபவர்கள் உடல் நிலையை சரியாகப் பராமரித்து, இடையிடையே ஓய்வு எடுத்து, தினசரி உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சினைகளைத் தவிர்க்கலாம் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பின்னர் இரு சக்கர வாகன ஓட்டிகள், தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம் பற்றி விளக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஆட்டோ, பேருந்து ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர்.

## எலப்பாக்கம் கிளை கழகம் சார்பில்

## முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 8ம் ஆண்டு நினைவு நாள் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து புகழஞ்சலி



சொல்லப்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் எலப்பாக்கம் திமுக கிளைக் கழகம் சார்பில் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பேருந்து நிலையம் அருகே அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் முகமது அலி தலைமையில் கலைஞர் அவர்களின் திருவருள் படத்திற்குமாலைஅணிவித்து மரியாதை செலுத்தினர்

இதில் முன்னாள் ஒன்றிய பொருளாளர் பொன்னிவளவன். எலப்பாக்கம் ஊராட்சி மன்றதலைவர் ஆதிலட்சுமி கோவிந்தராஜ். கிளைக் கழக நிர்வாகிகள் சம்பந்தம். அறிவழகன். மணிமாறன். ஆணைக்குன்னம் கிளைக் கழக செயலாளர் நேசமணி . அம்மனூர் கிளைக் கழக செயலாளர் வெங்கடேசன். உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி கிழக்கு ஒன்றியம் மற்றும் தூத்துக்குடி தெற்கு மாவட்டம் சார்பில் மாப்பிள்ளையூரனி பகுதியில் கலைஞரின் 8ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி கலைஞரின் திருவுருவப்படத்திற்கு முன்னாள் ஊராட்சி தலைவர் சரவணன் தலைமையில் ஒன்றிய துணைச் செயலாளர் கணேசன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.




## அச்சிறுப்பாக்கம் அருகே

## ஒரத்தி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்கள் போதை ஒழிப்பு சிறப்பு மனித சங்கிலி விழிப்புணர்வு பேரணி நடத்தினர்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் கல்வி மாவட்டம் ஒரத்தி அரசு மேல்நிலைப் பள்ளியில் இன்று காலை என் எஸ் எஸ் மாணவர்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்களின் மனித சங்கிலி ஊர்வலம் போதை ஒழிப்பு முன்னிட்டு நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் ஒரத்தி அரசு மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் துரைமுருகன் ,

பொறுப்பு அவர்களும் பிடிஏ தலைவர் ஓ பி சி மாறன் அவர்களும் என் எஸ்எஸ்திட்டஅலுவலர் என் ஏ அய்யா பாண்டியன் அவர்களும் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்கள் பலரும் கலந்து கொண்டனர்

## கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள ராயல் கேர் மருத்துவமனையில் உலக தாய்ப்பால் வார விழா



உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு, ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் குழந்தைகள் நலத் துறை, பிறந்த குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு (நியோநேட்டாலஜி) மற்றும் மருத்துவ ஊட்டச்சத்து துறைஇணைந்துஆக.1 முதல் 8–ம் தேதி வரை பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, செவிலியர்கள் மற்றும் மாணவர்களுக்கான தாய்ப்பால் விழிப்புணர்வு குறித்த பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. மேலும், செவிலியர்கள் மற்றும் பெற்றோருக்காக தாய்ப்பால் கொடுக்கும் முறைகள், அதில் ஏற்படும் சவால்கள், தாய் மற்றும் குழந்தைக்கு கிடைக்கும் நீண்டகால நன்மைகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

விழாவின் சிறப்பு நிகழ்வாக குழந்தைகள் நல மருத்துவர்கள், மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் பங்கேற்ற தொடர் மருத்துவக் கல்வி கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையிலான தாய்ப்பால் வழங்கும் நடைமுறைகள், தாய்மார்களின் ஊட்டச்சத்து மற்றும் புதிதாக குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு ஆதரவான சூழலை உருவாக்குவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை மருத்துவமனை தலைவர் டாக்டர் க. மாதேஸ்வரன் மற்றும் கலா மாதேஸ்வரன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சி மூலம் தாய்ப்பால் வழங்குவது தாயின் பொறுப்பு மட்டுமல்ல; குடும்பம், மருத்துவர்கள் மற்றும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகும் என்ற விழிப்புணர்வு வலியுறுத்தப்பட்டது. மேலும், தாய் சேய் நலனுக்கான அறிவியல் ஆதாரங்களுடன் கூடிய கருணைமிக்க சிகிச்சை சேவைகளை வழங்குவதில் ராயல் கேர் மருத்துவமனை தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

## தமிழக இளைஞர்களுக்கு புதிய நம்பிக்கை: 9 மாவட்டங்களுக்கு ODOP திட்டம்

### பாஜக ஊடகப் பிரிவு மாநில செயலாளர் அன்னபூர்ணா பிள்ளை வரவேற்பு



மத்திய அரசின் One District One Product (ODOP) திட்டத்தின் கீழ் தமிழகத்தின் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், கோவை, திருப்பூர், சேலம், மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டிருப்பது, தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மற்றும் இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் என தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் ஊடகப்பிரிவு மாநில செயலாளர் அன்னபூர்ணா பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மத்திய அரசின் One District One Product (ODOP) திட்டம், ஒவ்வொரு மாவட்டத்தின் பாரம்பரிய மற்றும் தனித்துவமான தயாரிப்புகளை உலக சந்தைக்கு கொண்டு செல்வதுடன், அவற்றிற்கு பிராண்டிங், தரச்சான்றிதழ், நவீன தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல், ஏற்றுமதி வசதிகள் மற்றும் நிதி ஆதரவை வழங்கும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும்.

இந்த திட்டத்தின் மூலம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வலுப்பெறுவதுடன், கைவினைஞர்கள், விவசாயிகள், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மற்றும் இளைஞர்களுக்கு புதிய தொழில் மற்றும் வேலைவாய்ப்புகள் உருவாகும். மாவட்டங்களின் அடையாளமாக விளங்கும்பொருட்கள் உலகசந்தையில்இடம்பிடித்து, ஏற்றுமதி வருவாயும் கணிசமாக அதிகரிக்கும்.

உத்தரப்பிரதேசத்தில் இந்தத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதன் மூலம், பல மாவட்டங்களின் பாரம்பரிய பொருட்கள் சர்வதேச சந்தையை அடைந்து, ஏற்றுமதி மதிப்பு உயர்ந்ததுடன், ஆயிரக்கணக்கான சிறு தொழில்கள் புத்துயிர் பெற்றுள்ளன. லட்சக்கணக்கான மக்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகியுள்ளன. அந்த வெற்றியின் அடிப்படையிலேயே தற்போது நாட்டின் பல்வேறு மாநிலங்களுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள 9 மாவட்டங்களும் ஏற்கனவே தொழில், உற்பத்தி மற்றும்ஏற்றுமதியில்முன்னணி வகிக்கும்நிலையில், ODOP திட்டத்தின் முழுமையான ஆதரவு கிடைப்பதன் மூலம் உலகளாவிய முதலீடுகள் அதிகரிக்கவும், ஏற்றுமதி மேலும் உயரவும், புதிய தொழிற்சாலைகள் மற்றும் துணைத் தொழில்கள் உருவாகவும் வாய்ப்புள்ளது. இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியையும், வேலைவாய்ப்பு உருவாக்கத்தையும் முன்னிலைப்படுத்தும் மத்திய அரசின் இந்த முயற்சி, மாநிலத்தின் தொழில் துறைக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமையும். மேலும், வருங்காலத்தில் தமிழகம் உலகளாவிய உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக உயர்வதற்கும் இந்தத் திட்டம் உறுதுணையாக இருக்கும் என்று அன்னபூர்ணா பிள்ளை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் மாப்பிள்ளையூரனி பகுதியில் முத்தமிழ் அறிஞரின் கலைஞர் கருணாநிதியின் 8ஆம் ஆண்டு வீரவணக்கம் நினைவு நாளை முன்னிட்டு கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பொன் பாண்டி ரவி, இளைஞர் அணி வழக்கறிஞர் பால்துரை ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் கருணாநிதியின் 8ஆம் ஆண்டு நினைவுநாள்

## அமைச்சர் கீதாஜீவன் தலைமையில் நினைவு ஊர்வலத்தில் 300க்கும் மேற்பட்ட திமுகவினர் பங்கேற்பு



தூத்துக்குடியில் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் முதல்–அமைச்சர் டாக்டர். கலைஞர் கருணாநிதி நினைவு நாளை முன்னிட்டு இன்று தூத்துக்குடி அண்ணா நகர் 7வது தெருவில் இருந்து முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தலைமையில் 300க்கும் மேற்பட்ட திமுகவினர் கலந்து கொண்ட அமைதி ஊர்வலம் நடைபெற்றது. இந்நிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியின் 8ஆம் ஆண்டு நினைவுதினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது தொடர்ந்து தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி அண்ணாநகர் 7–வது தெரு சந்திப்பில் இருந்து துவங்கிய நகரின் முக்கிய வீதி வழியாக சென்று கலைஞர் அரங்கம் வரை அமைதி ஊர்வலம் நடைபெற்றது. அங்கு அமைந்து உள்ள கலைஞர் உருவச்சிலைக்கு அமைச்சர் கீதா ஜீவன், தலைமையில் மேயர் ஜெகன் பெரியசாமி, துணை மேயர் ஜெனிட்டா, திமுக மாநகர செயலாளர் ஆனந்த சேகரன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்..

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், பொருளாளா் ரவீந்திரன், மாநிலபொறியாளர்அணி துணைச்செயலாளர் அன்பழகன், மாநகராட்சி மண்டல தலைவர்கள் வக்கீல் பாலகுருசுவாமி, கலைச்செல்வி, மாநகர துணைச்செயலாளர்கள் கீதாமுருகேசன், கனகராஜ், பொருளாளா் அனந்தையா, பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், சுரேஷ்குமார், ரவீந்திரன், ராமகிருஷ்ணன், மேகநாதன், மாவட்ட அணி நிா்வாகிகள் அந்தோணிஸ்டாலின், கவிதாதேவி, பிரபு, அந்தோணி கண்ணன், நாகராஜன், அருணாதேவி, நிக்கோலாஸ்மணி, தங்கம், ராமர், அருண்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கஸ்தூரிதங்கம், கோட்டுராஜா, மாவட்ட பிரதிநிதிகள் சக்திவேல், நாராயணன், சேர்மபாண்டி, செல்வகுமாா், ராஜ்குமாா், மீனாட்சி சுந்தரம், மாநில பேச்சாளர் சரத்பாலா, மாநகர அணி நிா்வாகிகள் ஜீவன்ஜேக்கப், ஆனந்தசேகா், முருகஇசக்கி, சாரதி, பால்ராஜ், டைகா் வினோத், செல்வின், பால்ராஜ், மகேஸ்வரன்சிங், கவுன்சிலர்கள் சந்திரபோஸ், ரெக்ஸின், பவானி ஜெயசீலி, அந்தோணி பிரகாஷ்மார்ஷல், பொன்னப்பன். விஜயகுமார். சரவணக்குமார், வைதேகி, இசக்கிராஜா, வக்கீல்கள் மோகன்தாஸ் சாமுவேல், ஆனந்த கபாியேல்ராஜ், நாகராஜன் பாபு, ரூபராஜா, தொமுச நிர்வாகிகள் முருகன், கருப்பசாமி, பெத்துராஜ், வேல்முருகன், பகுதி பொருளாளா் முத்துராஜா, வட்டச்செயலாளர்கள் பாலகுருசாமி, கதிரேசன், ராஜாமணி, சுப்பையா, முனியசாமி, ரவீந்திரன், செந்தில்குமார், சிங்கராஜ், டென்சிங், பகுதி அணி அமைப்பாளர்கள் காசிராஜன், ஆனந்தி, செல்வம், முன்னாள் கவுன்சிலர்கள் பாலு, இசக்கிமுத்து, பொியசாமி, பிச்சையா, செந்தில்குமார், பகுதி பிரதிநிதிகள் பிரபாகர், செந்தில்குமாா், மற்றும் முரளிதரன், மணி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பெரும்பேர் கண்டிகை கிராமத்தில் எல்லையம்மன் கோவிலில் தீமிதி திருவிழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அடுத்த பெரும்பேர் கண்டிகை கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ எல்லையம்மன் கோவில் ஆண்டுதோறும் ஆடி மாதம் நான்காவது வெள்ளிக்கிழமை தீமிதி திருவிழா நடைபெறுவது வழக்கம் இந்த நிலையில் இந்த ஆண்டு நான்காம் ஆடி வெள்ளிக்கிழமையான இன்று காலை குளக்கரையில் இருந்து கரகத்துடன் அம்மனை அழைத்து வந்து கோவில் அருகே அமைக்கப்பட்ட தீ குண்டத்தில் அம்மனுக்கு காப்பு கட்டி விரதம் இருந்த பக்தர்கள் தீ மிதித்து அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் சுற்று வட்டார பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



தூத்துக்குடி 42வது வார்டு தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 42வது வார்டு சங்க அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட கலைஞரின் திருவுருவபடத்திற்கு 42வது வார்டு பொதுக்குழு உறுப்பினர் கோட்டு ராஜா தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



தூத்துக்குடிவடக்குமாவட்டதி.மு.க.சார்பில்முத்தமிழறிஞர்கலைஞர்கருணாநிதியின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கலைஞர் அரங்கம் அருகே கலைஞரின் உருவச்சிலைக்கும்திருவுருவபடத்திற்கும்15வதுவார்டுமாமன்றஉறுப்பினர்இசக்கிராஜா மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



காமராசர் அரசு கலைக்கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் அணி எண்கள் 191 மற்றும் 201 சார்பில் போதைப் பொருள்கள் தொடர்பான பேரணி சுரண்டை பேருந்து நிலையத்திலிருந்து அழகு பார்வதி அம்மன் கோவில் வரை மாணவர்கள், மாணவியர்கள் கலந்துகொண்டுஉறுதிமொழியேற்றனர்.நிகழ்வுகளைகல்லூரிமுதல்வருடன்இணைந்து இதில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள், முனைவர். தா.திருநாவுக்கரசு, முனைவர். பெ.பிரேம்சந்தர் அவர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், வெள்ளாளபாளையம் பள்ளி முதல் பொலவக்காளிபாளையம் கிராம சாலை வரையில் சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (7.8.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

## மதுரை திருப்பரங்குன்றம் அருகே முத்துப்பட்டி கிராமத்தில் கிராம மக்கள் சார்பாக குடமுழுக்கு விழா நடைபெற்றது

மதுரை திருப்பரங்குன்றம் அருகே முத்துப்பட்டி கிராமத்தில் கிராம பொதுமக்களுக்கு சொந்தமான முத்துப்பட்டி காளியம்மன் திருக்கோவில் உள்ளது.200ஆண்டுகள் பழமையான இக்கோவிலில் கிராம மக்கள் வழி வழியாக வழிபட்டு வருகின்றன. இந்நிலையில் தான் கடந்த 2025 ஆம் ஆண்டு கிராம மக்கள் சார்பாக குடமுழுக்கு விழா நடைபெற்றது. இதில் கோவில் நிர்வாகிகளாக உள்ள ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து கோவிலை இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர ஏற்பாடு செய்தனர்.

அதனைத் தொடர்ந்து முத்துப்பட்டி காளியம்மன் கோவில் இந்து சமய அறநிலைத்துறை கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அதனை தொடர்ந்து அங்கு நடைபெறும் திருவிழாக்கள் பூஜைகள் போன்றவற்றில் நடைபெற இந்து சமய அறநிலைத்துறைக்கும் கிராம பொதுமக்களுக்கும் தொடர்ந்து தகராறு ஏற்பட்டது. திருவிழாவிற்கு பொதுமக்கள் இந்து சமய அறநிலையத்துறைக்கு வரி செலுத்தினால் திருவிழா நடத்த ஏற்பாடு செய்வதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவித்ததாக சொல்லப்படுகிறது. இத்தனை ஆண்டுகளாக திருவிழா நடத்த நாங்கள் கடைபிடித்த வழிமுறைகளை பின்பற்றுகிறோம் அதற்கு ஒத்துழைப்பு கொடுங்கள் என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். அதற்கு அறநிலையத்துறை செவி சாய்க்கவில்லை என சொல்லப்படுகிறது. இந்த ஆண்டு ஆடி மாதம் திருவிழா நடைபெறுவதற்காக கிராம பொதுமக்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக கடந்த 25 நாட்களுக்கு முன்னதாகவே இந்து



சமய அறநிலையத்துறை இணை ஆணையர் மற்றும் அவனியாபுரம் பால மீனாம்பிகை கல்யாண சுந்தரேஸ்வரர் திருக்கோவில் நிர்வாக அலுவலர் ஆகியோருக்குதகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அறநிலையத்துறை சார்பில் எந்தவித உதவியும் செய்யப்படாததால் பொதுமக்கள் இன்று கோயில் முன்பு பொங்கல் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டவர் தொடர்ந்து அவ்வழியாக வந்த அரசு பேருந்தை மறித்து திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் தொடர்ந்து பெண்கள் சாமி வந்தது போல் ஆடியதால் அந்த இடம் மேலும் பரபரப்பானது.

மேலும் காளியம்மன் கோவில் திருவிழா தொடர்பாக இந்து சமய அறநிலைத்துறை ஒத்துழைப்பு தராவிட்டால் தொடர்ந்து போராட்டம் நடைபெறும் என முத்துப்பட்டி கிராம பொதுமக்கள் தெரிவிக்கின்றன

## மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டாரத்தில் உள்ள ஆடை தயாரிப்பு நிறுவனத்தில் கலெக்டர் ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டாரத்தைச் சேர்ந்த மேலக்கோட்டை ஊராட்சியில் 'செம்பருத்தி' மகளிர் சுய உதவிக்குழுவைச் சேர்ந்த தனிநபர் தொழில்முனைவோர் திருமதி C. ஷைலி ஷைனி ஜாய் (C. Shily Shiny Joy) அவர்களின் ஆடை தயாரிப்பு நிறுவனத்தை (Garment Unit) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, கிராமப்புறத் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் (SVEP) கீழ் சமுதாய முதலீட்டு நிதியாக 40,000 மற்றும் சுய உதவிக்குழு மூலமாக 80,000 பெற்ற கடனுதவி குறித்தும், இங்கு ஆடைகளுடன் சேர்த்துத் துணிப்பைகளும் (Cloth Bags) உற்பத்தி செய்யப்பட்டு வருவது குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும், இந்நிதியுதவிக்குபின் நிறுவனத்தின் உற்பத்தி அதிகரித்து, ஆண்டுக்கு 12 லட்சத்திற்கு மேல் விற்றுமுதல் (Turnover) அடைந்து, மாதந்தோறும் 1,00,000-க்கும் மேல் வருவாய் ஈட்டி வருவது குறித்தும் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

தொடர்ந்து,தொழிலை மேலும் விரிவாக்கவும், உற்பத்தியாகும் ஆடைகள் மற்றும் துணிப்பைகளைச் சந்தைப்படுத்தவும் தேவையான ஆலோசனைகளை வழங்கி, சிறப்பாகச் செயல்பட்டு வரும் தொழில்முனைவோரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தார். இந்த ஆய்வின் போது,தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கத் திட்ட இயக்குநர் திரு. சுரேஷ் உட்பட தொடர்புடைய அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



## தென்காசி மாவட்டம் சாம்பவர் வடகரையில் இசைத்தமிழ் அறிஞர் ஆபிரகாம் பண்டிதரின் 168 வது பிறந்தநாள் விழா

இசைத் தமிழ் அறிஞர் ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் 168 வது பிறந்தநாள் விழா அவர் பிறந்த ஊரான தென்காசி மாவட்டம் சாம்பவர் வடகரையில் இந்து நாடார் உறவின்முறை கமிட்டி நாட்டாமை வெங்கடேஷ் மற்றும் உறவின்முறை நிர்வாகிகள் தலைமையில் புகழ் வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் சாம்பவர் வடகரை இந்து நாடார் உறவின்முறை நாட்டாமை வெங்கடேஷ் மற்றும் நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத்தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் மற்றும் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு நிர்வாகிகள் ஆபிரகாம் பண்டிதரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினர்

இந்த விழாவில் அகரக்கட்டு லூர்து நாடார் பேசும் போது சாம்பவர் வடகரையில் முத்துச்சாமி நாடார் அன்னம்மாள் அவர்களுக்குமகனாகபிறந்தவர் ஆபிரகாம் பண்டிதர் இந்துவாகப் பிறந்து கிறிஸ்தவராக வளர்ந்து சுருளிமலை சித்தர் கருணாணந்த சுவாமிகளின் சீடராக கடைசி வரைவாழ்ந்தவர்மேலும் தமிழனின் இசை தான் உலகின் மூத்த இசை இதில் இருந்து பிறந்தது தான் கர்நாடக் இசை என்று உலகுக்கு அறிவித்து ஏழு இசை மாநாடுகளை நடத்தி நிரூபித்து வெற்றி கண்டவர் பல நாடுகளுக்கும் சென்று இசை ஆராய்ச்சி பற்றி விளக்கம் அளித்து தமிழனின் இசை தான் மூத்த இசைஎன்றுநிரூபித்தவர் புதிய புதிய இசை கருவிகளையும் புதிய புதிய ராகங்களையும் தனது ஆய்வின் மூலம் கண்டுபிடித்தவர் ஆபிரகாம் பண்டிதர்



இவர் எழுதிய கர்ணாமிர்தம் சாகரம் திரட்டு என்ற இசை ஆராட்சி நூல்தான் இன்றளவும் எல்லா இசை பள்ளிகளிலும் முதல் நூலாக மூத்த நூலாக விளங்கி வருகிறது

சித்த மருத்துவத் துறையில் பல பதக்கங்களையும் பட்டங்களையும் பெற்றவர் வேளாண்மை துறையில் பல சாதனைகள் படைத்தவர் செங்கரும்பு கிளிமூக்கு மாங்கா கத்தரிக்காய் போன்ற ஒட்டு ரக காய்கறிகளை கண்டுபிடித்தவர் இதற்காக ஆங்கிலேய அரசிடம் பல விருதுகள் பெற்றவர் ஆபிரகாம் பண்டிதரின் பிறந்தநாளில் அவருக்கு புகழ் வணக்கம் செலுத்துவதில் சாம்பவர் வடகரை இந்து நாடார் உறவின்முறை நிர்வாகிகளும் ஊர் பொதுமக்களும் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகளும் பெருமை கொள்வோம் என்றும்

ஆபிரகாம் பண்டிதரின் பெயரில் சித்த மருத்துவர்களுக்கு வேளாண்மையில்சாதனைபடைத்தவர்களுக்கு மேடை கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா விரைவில் நடைபெறும் என்று பேசினார் இந்த விழாவில் சாம்பவர் வடகரை இந்து நாடார் உறவின் முறைகமிட்டி நாட்டாமை மற்றும் நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் தென்காசி மாவட்ட தலைவர் குருசாமி நாடார் பொருளாளர் சுப்பிரமணியன் செங்கோட்டை ஒன்றிய தலைவர் மணிகண்டன் ஒன்றிய இளைஞரணி தலைவர் கார்த்திகைக் குமார் ஒன்றிய துணை தலைவர்சக்திவேல் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## ரெயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை தென்காசி எம்.பி. ராணி ஸ்ரீகுமார் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்



தென்காசி நாடாளுமன்ற தொகுதியின் வளர்ச்சி மற்றும் தென்தமிழகத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டும் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்றும் மாண்புமிகு மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் நேரில் சந்தித்து கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட மனு அளித்தார்

1. பெங்களூர் முதல் மதுரை வரை செல்லும் கண்டோன்மெண்ட் வந்தே பாரத் இரயிலை (20671/20672) தென்காசி வரை நீட்டிக்க வேண்டி.

2. தாம்பரம் முதல் மதுரை வரை செல்லும் தேஜஸ் விரைவு இரயிலை (22671/22672) இராஜபாளையம் வரை நீட்டிக்க வேண்டி.

3. கோயம்புத்தூர் முதல் மதுரை வரை செல்லும் இரயிலை (16721/16722) செங்கோட்டை வரை நீட்டிக்க வேண்டி.

4.செங்கோட்டை முதல் தாம்பரம் வரை சிலம்பு விரைவு இரயிலை (20681/20682) LHB பெட்டியுடன் தினசரி இயக்க வேண்டி. 5. கொல்லம் முதல் தாம்பரம் செல்லும் கொல்லம் விரைவு இரயிலில் (16101/16102) மூன்று முன்பதிவற்ற பெட்டிகளை இணைக்க வேண்டி.

6. தென்காசி முதல் தாம்பரம் வரை விரைவில் புதிய வந்தே பாரத் இரயில் சேவையை தொடங்க வேண்டி.

7. சங்கரன்கோவில் ரயில் நிலையத்தை அம்ரித் பாரத் ரயில் நிலையத்திட்டத்தின்கீழ்மேம்படுத்துதல்...

இந்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக அமைச்சர்உறுதிஅளித்துள்ளார்.





1

EXECUTIVE SUMMARY & THE VISIONARY MANDATE

The World Siddha Foundation (WSF) is initializing a historic, high-vibrational ecosystem across 150 acres of land. This project is a multi-dimensional synthesis of ancient Siddha wisdom, monumental architecture, world-class medical tourism, and automated public charity

WSF builds a self-sustaining spiritual infrastructure city. By creating a highly restrictive, ultra-exclusive wellness layer for the top 0.1% of global earners, we generate an indestructible, recurring operational surplus. This surplus completely funds, guarantees, and scales our massive public welfare initiatives—including an eternal 24/7/365 free food kitchen (Annadhana Koodam) and a free state-of-the-art holistic hospital.



## சுரண்டை எஸ்.ஆர். ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் "நோக்கு நிலைப்பயிற்சி" உற்சாகமாக நடைபெற்றது



தென்காசி மாவட்டம் சுரண்டையில் செயல்பட்டு வரும் எஸ்.ஆர். ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில், மாணவர்களின் இலக்கு நிர்ணயம் மற்றும்எதிர்காலகனவுகளை ஊக்குவிக்கும் வகையில் "நோக்கு நிலைப்பயிற்சி" நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு குழல்வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளையின் நிறுவனர் சிவ பபிஸ்ராம், பள்ளியின் செயலர் சிவ டிப்ஜினிஷ் ராம், முதல்வர்கள் பொன் மனோன்யா மற்றும் புஷ்பா ஆகியோர் தலைமை தாங்கினர். பள்ளியின் தலைமை ஆசிரியர் மாரிக்கனி முன்னிலை வகித்தார். ஒருங்கிணைப்பாளர் வான்மதி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து மாணவர்களை வழிநடத்தினார்.

நிகழ்ச்சியில் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர் பங்கேற்றனர். மாணவர்கள் தங்களது எதிர்கால இலக்குகளை வெளிப்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சியர், மருத்துவர், காவல் ஆய்வாளர், ஆசிரியர் மற்றும் இளம் விஞ்ஞானி உள்ளிட்ட பல்வேறு துறைகளை பிரதிபலிக்கும் வேடங்களில் தோன்றி தன்னம்பிக்கையுடன் உரையாற்றினர்.

பின்னர் ஹிந்தி மொழியில் மழலையர் கீதங்களைப் பாடியதுடன்,பெற்றோர்கள் முன்னிலையில் சரளமாக ஆங்கிலத்தில் உரையாற்றிதங்களதுமொழித் திறமையையும் வெளிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்காக வினாடி-வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் சரியான விடைகளை அளித்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## ஆலங்குளம் அருகே கிராம கமிட்டி மேல்நிலைப்பள்ளியில் பெற்றோர்- ஆசிரியர்கள் கலந்தாய்வு கூட்டம்



தென்காசி கல்வி மாவட்டத்திற்குட்பட்ட ஆலங்குளம் அருகே உள்ள வெங்கடேஸ்வரபுரம் (ரெட்டியார்பட்டி) கிராம கமிட்டி மேல்நிலைப்பள்ளிவளாகத்தில் பெற்றோர்-ஆசிரியர்கள் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பள்ளி தலைமை ஆசிரியர் குகன் தலைமை வகித்தார். ஆசிரியர் நாராயண உமாராணி முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் ஏராளமான பெற்றோர்கள் மற்றும் மாணவ, மாணவியரும் பங்கேற்று பள்ளியில் மாணவமாணவிகள் கல்வி வளர்ச்சி, மாணவர்களின் கல்வி முன்னேற்றம் மற்றும் ஒழுக்கம் தொடர்பாக கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

அதனையெடுத்து மாணவ மாணவிகள் பெற்றோர்களை பாராட்டும் விதமாக பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் தமிழ் ஆசிரியர் அருணகிரி, ஆங்கில ஆசிரியர் பொன்குமரன், ஆசிரியர்கள் இளங்கோ, சரவணன், பிரபு, ஜார்ஜ் அருள்ராஜ், வெள்ளையம்மாள், ராதா, வெண்ணிலா, பிரபா, மகேஷ்வரி, சேர்மக்கனி, உடற்கல்வி ஆசிரியர்கள் சிவக்குமார், மகேஷ்வரன், செல்வக்குமார், ஆஷா, செல்வராணி, சிந்தியா, இசக்கித்துரை உள்ளிட்டோர் கலந்து கொண்டு கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் நிறைவில் ஆசிரியர் அழகன் நன்றி உரையாற்றினார்.

## கோவையில் நடைபெற்ற வருமானவரி ஓய்வூதியர்கள் மாநில மாநாடு



தமிழ்நாடு வருமான வரி ஓய்வூதிய சங்கத்தின் முதல் மாநில மாநாடு கோவைஆர்எஸ்புரம்பகுதியில் உள்ள ராஜஸ்தானி சங்க அரங்கில் நடைபெற்றது அதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்நடராஜன்பங்கேற்பு..

கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் உள்ள ராஜஸ்தானி சங்க அரங்கில், தமிழ்நாடு வருமான வரி ஓய்வூதிய சங்கத்தின் முதல் மாநில மாநாடு நடைபெற்றது.சங்ககொடியேற்றத்துடன்துவங்கபட்ட இந்த விழாவில், இந்திய வருமான வரி ஊழியர்கள் சம்மேளனத்தின் முன்னாள் மாநில பொதுச்செயலர் ராஜகோபால் சங்க கொடியினை ஏற்றி வைத்தார். வருமான வரி ஓய்வூதியர் கோவை மண்டல தலைவர் ஜோதி வரவேற்புரையாற்றினார் தமிழ்நாடு வருமான வரி ஓய்வூதியர் சங்க சென்னை தலைவர் கணேஷ்பாபு, தலைமை உரையாற்றினார்பொது செயலர்பெருமாள் சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி. ஆர் நடராஜன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய தமிழ்நாடு வருமான வரி ஓய்வூதியர்கள் சங்க கோவை மண்டல செயலர் வெங்கட்ராமன் கூறியதாவது..இச்சங்கம் துவங்கி 14 ஆண்டுகள் கடந்துள்ளது. இச்சங்கத்தின் சார்பாக சர்வதேச மாநாடு நடத்திவிட்டோம்..

ஆனால் மாநில அளவிலான மாநாடு நடத்த படவில்லை. இதனை தொடர்ந்து இங்கு முதல் மாநில மாநாடு நடைபெற்று கொண்டிருக்கிறது இந்த மாநாட்டில் கலந்து கொள்ள தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும் ஓய்வூதியர்கள் கலந்து கொண்டுள்ளனர் என தெரிவித்தார். இந்த மாநாட்டின் வாயிலாக, அரசுக்கு ஒரு சில தீர்மானங்களை முன் வைத்து உள்ளோம். அதில் 1996ம் ஆண்டு முதல் கருத்தியல் ரீதியாக உயர்த்தபட்ட ஊதியம்பெறும்அனைத்து ஓய்வு பெற்ற வருமான வரி ஆய்வாளர் மற்றும் வருமான வரி அலுவலர்களின் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியத்தை சீரான,காலவரையற்ற அடிப்படையில் மறுசீரமைப்பு செய்து திருத்தம் செய்யுமாறு அனைத்து, முதன்மை, தலைமை, ஆணையர்களுக்கும் உத்தரவிட வேண்டும், உயர்த்தப்பட்ட கருத்தில் ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வூதியத்தை சரியாக மறுக்கணக்கீடு செய்வதற்கும், தாமதத்திற்கான காலத்திற்கான வட்டியுடன் கூடிய தொடர்ச்சியான பாக்கித்தொகை களை வழங்குவதற்கும், அனைவருக்கும் ஒருங்கிணைந்த வழிமுறைகளை வழங்க வேண்டும்என்பதுபோன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக கூறினார். இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் பொழுது தமிழ்நாடு வருமான வரி ஓய்வூதியர் சங்க மண்டல பொருளாளர்

இராஜேந்திர பிரசாத், மாநாடு ஒருங்கிணைப்பாளர் ரகுபதி, கமிட்டி நிர்வாகி முகமது அனு உள்ளிட்டோர் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவையில் பாயண்ட் மீடியா சார்பாக கோவை கொடிசியா வளாகத்தில் இன்டீரியோ மற்றும் எக்ஸ்டீரியோ கண்காட்சி துவக்கவிழா,

### வீடு கட்ட தேவையான உதிரி பாகங்கள், வீடுகளை அழகுற செய்யும் பொருட்களின் கண்காட்சி!!!




கோவை கொடிசியா வளாகத்தில் உள்ள பி அரங்கில், ஆகஸ்ட் 7ம் தேதியான இன்று, பாயண்ட் மீடியா சார்பாக, இன்டீரியோ மற்றும் எக்ஸ்டீரியோ கண்காட்சி நடைபெற்றது மூன்று நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில் வீடுகள் கட்ட தேவையான உதிரி பாகங்கள், வீடுகளை அழகுற செய்யும் இன்டீரியர் மற்றும் எக்ஸ்டீரியோ சார்ந்த பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் காட்சி படுத்த பட்டுள்ளது மேலும் இது குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய,

பாயண்ட் மீடியா நிறுவனத்தின் தலைவர் சுந்தரமூர்த்தி கிருஷ்ணன் மற்றும் நிர்வாக இயக்குனர் ஹேமா சுந்தரமூர்த்தி ஆகியோர் கூறியதாவது கட்டுமானம், உள்துறை மற்றும் வெளித்துறை வடிவமைப்புத் துறைகளில் புதிய தொழில்நுட்பங்கள், நவீன தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஒரே இடத்தில் அறிமுகப்படுத்தும் நோக்கில் இக்கண்காட்சி இன்று முதல், நாளை 8ம் தேதி மற்றும் 9ம் தேதி என மூன்று நாட்கள் இங்கு, கோவை கொடிசியா வர்த்தக கண்காட்சி மையத்தின் பி.மற்றும் சி ஆகிய அரங்குகளில் நடைபெற்று வருகின்றது என்றனர். மேலும்

17 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடைபெற்று வரும் இந்த கண்காட்சி, தற்போது தனது 13-வது பதிப்பை எட்டியுள்ளதாகவும்

கண்காட்சியுடன் இணைந்து கட்டுமான கண்காட்சியும் நடைபெறுகிறது. இதில் கட்டுமானம், இன்டீரியர், எக்ஸ்டீரியர், சிவில் இன்ஜினியரிங், கட்டிட வடிவமைப்பு உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் தங்களது புதிய தயாரிப்புகள், தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்த உள்ளதாகவும்,

இந்த ஆண்டுக்கான கண்காட்சியில் நாடு முழுவதும் இருந்து 400-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்று உள்ளது, இதில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் இந்த மூன்று நாட்களில், வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக கூறினர். மேலும் தொழில்துறையினர், கட்டிடக் கலைஞர்கள், இன்டீரியர்டிசைனர்கள், பில்டர்கள்,மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவருக்கும் பயனுள்ள வகையில் இந்த கண்காட்சி அமைந்து வருகின்றது என்று தெரிவித்தார்.

## கலைஞர் நினைவு தினம்: வாலாஜாபேட்டையில் திருவுருவப் படத்திற்கு மரியாதை



மறைந்த முன்னாள் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் டாக்டர் கருணாநிதியின் நினைவு தினத்தை முன்னிட்டு, ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில், தி.மு.க. முன்னாள் நகரச் செயலாளர் த.கா.பா. புகழேந்தி, ராணிப்பேட்டை மாவட்ட பகுத்தறிவாளர் கழக செயலாளர் ந. ராமு, தி.மு.க. இளம் பேச்சாளர் தமிழ்வாணன், விஜயகுமார், குமரேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.



ஈரோடு தெற்கு மாவட்ட திமுக கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் சு. முத்துசாமி வழிகாட்டிகளின் படி தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நேற்று (7826) ஈரோடு மாநகர் 47 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கருணாநிதி திருவுருவப்படத்திற்கு ஈரோடு மாநகராட்சி 47 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் S.நந்தகோபு மலர் தூவி

மரியாதை செலுத்தினர்.இந்த நிகழ்வில் 47 ஆவது திமுக வார்டு செயலாளர் நெப்போலியன், 47 ஆவது வார்டு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,BLA2,BLC, BDA நிர்வாகிகள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 12வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டுசிறப்புகைத்தறிகண்காட்சிமற்றும்விற்பனையினைமாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (7.8.2026) துவக்கி வைத்து, பார்வையிட்டார்.

### கோவை காந்தி பார்க்கில் 260 ஆண்டுகள் பழமைவாய்ந்த

## அரசமரத்தடி சக்தி மகா முனீஸ்வரர் மஹா காலபைரவர் திருக்கோயில் திருவிழா

### 1500க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு கறி விருந்து நடத்த திட்டம்



கோவை காந்தி பார்க் அருகில் உள்ள சுந்தரம் வீதியில் 260 ஆண்டுகள் பழமைவாய்ந்த அருள்மிகு அரசமரத்தடி ஶ்ரீ சக்தி மகா முனீஸ்வரர், மஹா காலபைரவர் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோவிலின் 160 ஆம் ஆண்டு ஆடி மகா உற்சவதிருவிழாநிகழ்ச்சியானதுவெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியானது ஆனி மாதம் 30 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது மற்றும் ஆகஸ்ட் 4 ஆம் தேதி சுந்தரம் வீதி சித்தி விநாயகர் கோவிலில் இருந்து கரகம் மற்றும் அணிக்கூடை ஊர்வலம் பக்தர்கள் தலையில் சுமந்து திருவீதியுலா வந்தனர். ஆகஸ்ட் 5 ஆம் தேதி முனிஸ்வரர் கோவிலில் மாவிளக்கு வைத்து , பச்சை காளி, பவளக்காளி ஆட்டத்துடன் முனீஸ்வரர் குதிரை வாகனத்தில் எழுந்தருளி ஊர்வலமாக வந்தார். பம்பை வாத்தியம், கைலாய வாத்தியம் மற்றும் ஜமாப் இசை முழங்க ஆடல்,பாடலுடன்,சாமியை அழைத்து வந்தபக்தர்கள் பக்தி பரவசத்தில் உற்சாக நடனம் ஆடினர்.

இதில் திருக்கோயில் விழாத்தலைவர் நாகராஜ் மற்றும் பழனி ஆதினம் சீடர் திருக்கோயில் அர்ச்சகர் புலிப்பாணி சுதாகரன் சுவாமிகள், திருக்கோயில் முன்னால் நிர்வாகி.. அமீர் பாய், கோபால் அய்யா, சுரேஷ்,நல்லையன்,சிவலிங்கம்,பிரபு,வரதராஜ்,தயிர் தம்பு, ஆட்டோ ஆனந்தன், குமார், உமர், சுந்தர் ராஜ், வினோத், ஜெகதீசன், முரளி, ஶ்ரீ பிரசாந்த், ரூபவிக்னேஷ்,மனோஜ்,உள்ளிட்டபலர்விழாவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். தொடர்ந்து இது குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய.. பாச உள்ளம் சமூக நல மக்கள் அமைப்பின் நிறுவனர் கோவை கோகுல் கூறியதாவது.. இக்கோவிலில் ஆகஸ்ட் 9 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை கிடா வெட்டு அன்னதானம் மதியம் 12 மணியளவில், கோவில் முன்பு நடைபெற உள்ளது இதில் சுமார் 1500க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்ளுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 12 வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்புகைத்தறிகண்காட்சியில்மாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (7.8.2026) மூத்த நெசவாளர்களுக்கு பொன்னாடை அணிவித்து, நினைவு பரிசு வழங்கி கௌரவித்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 12 வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு சிறப்பு கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (7.8.2026) துவக்கி வைத்தார்.

## India reacts to TurkeyPakistan Saudi defence deal: 'Closely following the development'



*India on Friday responded to the newly signed defence agreement between Saudi Arabia, Turkey and Pakistan, saying it was "closely following the development." The trilateral pact was signed during a meeting between Saudi Crown Prince Mohammed bin Salman, Turkish President Recep Tayyip Erdogan and Pakistan Prime Minister Shehbaz Sharif in Saudi Arabia, amid growing regional security concerns.*

*The development is significant for India as, according to Pakistan's foreign ministry, the agreement treats an attack on any one member as an attack on all. "The Agreement is intended to strengthen collective deterrence against any act of aggression, and stipulates that any armed attack against any one of the three States shall be regarded as an attack against them all. It further provides for the enhancement of all aspects of defence cooperation among the three States," the Pakistan foreign ministry said in a statement, according to news agency AP.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.